[24th August 1961

[THE HON SRI M. A. MANICKAVELU : தண்ணீர் கொடுத்தால் தான் வரி, அதாவது "When water is made available" என்று இருக்கிறது. தண்ணீர் கொடுத்தால்தான் வரி போடுகிறோம். ஆனால் நாம் சில இடங்களில் தண்ணீர் கொடுத்தாலும் அந்த விவசாயிகள் அதை எடுத்து உபயோகித்துக்கொள்ளவிட்டால் அதற்குப் பொறுப்பு நாம் இல்லை. அந்தப் பிரச்னைகளில் விவசாயிகள் வரி கட்டும்படியாகத் தான் இருக்கிறது. இன்னும் சில இடங்களில் சில சிக்கல் தண்ணீர் எடுத்துக்கொள்வதில் வருகிறது. அது வேறு விஷயம். சண்டை சச்சரவு வருகிறபோது அது தனியாகக் கவனிக்கப்படும். லோயர் பவானியைப் பற்றித் தலைவலி என்றார்கள். ஒன்றும் தலைவலியே கிடையாது. போர்டு மெம்பர்கள் எல்லாம் அங்கே போய் உட்கார்ந்துகொண்டு எல்லாவற்றையும் பரிசீலனை செய்து பார்த்து நல்ல முடிவை எடுத்து விட்டார்கள். ஒவ்வொரு ப்ராஜெக்ட்சுக்குக் கீழும் நாம் சட்டம் கொண்டு வரவேண்டியது இல்லை. இந்தச் சட்டத்தை திருத்திவிட்டால் போதுமானது என்று இதைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் கனம் அங்கத்தினர்கள் பேசியதைப் பார்த்தால், அதுவும் திரு. செல்வராஜ் பேசியதைப் பார்த்தால் இது ரொம்ப பயங்கரமானது, ஆபத்தானது என்றெல்லாம் அங்கத்தினர்கள் தங்கள் மனதைக் குழப்பிக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பயம் இருக்கிற சூழ்நிலையில் நான் இந்த மசோதாவைக் கொண்டு வர விரும்பவில்லை. பயம் தெளியட்டும். சேறு குழம்பியிருக்கிற தண்ணீர் கூடக் கொஞ்ச நேரமானால் தெளிந்து விடுகிறது. அதைப் போல இந்த பயம் தெளிகிற வரைக்கும் இந்த மசோதாவை ஒத்திப்போடலாம் என்று நான் நினைக்கிறேன். ஆகவே மசோதாவை ஒத்திப்போடும் இந்த மோஷனை நான் பிரேரிபிக்கிறேன்.

Sir, I move—

"That further consideration of the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 17 of 1961), be postponed."

DEPUTY SPEAKER : Now that the Hon. Minister has moved for postponing the further consideration of the Bill, I think the House has no objection to the postponement.

SRI M. KALYANASUNDARAM : Nobody is objecting to the postponement of the Bill, Sir.

DEPUTY SPEAKER : Then, I shall put the motion to the vote of the House. The question is—

"That further consideration of the Madras Irrigation Cess (Amendment) Bill, 1961 (L.A. Bill No. 17 of 1961) be postponed.

The motion was put and carried and further consideration of the Bill was postponed.

II.—ANNOUNCEMENTS—*cont.*

(2) THE MADRAS PAWNBROKERS (AMENDMENT) BILL, 1960

DEPUTY SPEAKER : I have to anonunce to the House that the Governor has given his recommendation for consideration by the Madras Legislative Assembly of the Madras Pawnbrokers (Amendment) Bill, 1960.